# ஜெயங்கொண்டம் நகராட்சி

**நகர் மன்ற அவசரக் கூட்டம்**

ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2023 ஆம் ஆண்டு *ஏப்ரல்* மாதம் **13**.04.2023 ஆம் தேதி *வியாழக்* கிழமை காலை **11.00** மணி அளவில் நடைபெற உள்ள *அவசரக்* **கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கான மன்றப் பொருள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

**இக்கூட்டத்தில் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

1.ஜெயங்கொண்டம் நகராட்சி அரியலூர் மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். மேலும் அரியலூர் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமாக ஜெயங்கொண்டமாக உள்ளது. இந்நகரம் ஏற்கனவே பெரம்பலூர் மாவட்டத்தில் இணைந்திருந்த போது மேற்கில் மிக அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக திகழ்ந்தது. இந்நகரம் வடக்கில் 11.218143 டிகிரி அட்ச ரேகையிலும் கிழக்கில் 79.367897 டிகிரி தீர்க ரேகையிலும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 65 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது.

இந்நகரிலிருந்து சுமார் 8 கி.மீ தொலைவில் ராஜராஜ சோழன் மகன் ராஜேந்திர சோழனால் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டு பதினொன்றாம் நூற்றாண்டில் நடுவில் இதனை முதலாம் ராஜேந்திர சோழன் தனது தலைநகரமாக ஆக்கினார்.

மேலும் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. இது உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமாகும். தற்போது இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு கங்கைகொண்ட சோழபுரம் கோவில் அகழ்வாராய்சியை மேற்கொண்டுள்ளது. மேலும் மாளிகைமேடு என்னும் இடத்தில் சோழர்கால அரண்மனை அகழ்வாராய்ச்சி நடைப்பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு சுற்றுலாதலாமாக அறிவிக்கப்பட்டது. மேலும் இத்தலம் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் புகழிடமாக விளங்கப்படுகிறது.

இதனுடைய வரலாற்று சிறப்பு மற்றும் பெருமைகளை வெளிக்கொனரும் வகையில் ஜெயங்கொண்டம் நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி அரசுக் கடித எண்.3277/நநி–V/2023 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.04.2023 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவிப்பு கடித ந.க.எண்.10910/2023/எம்ஏ2 நாள்.06.04.2023 கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்புகளில் இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற்கு நகர்மன்ற ஒப்புதலுடன் முன்மொழிவு கோரப்பட்டதின் படி கீழ்கண்ட விவரங்களின்படி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ஜெயங்கொண்டம் நகராட்சி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3603/2002/சி–1 நாள்.18.06.2004 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக

தரம் உயர்த்தப்பட்டும் மற்றும் அரசாணை(நிலை) எண்.154 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக இந்நகராட்சி இயங்கி வருகிறது.

2. 2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 31268 ஆகும். இதனடிப்படையில் அரசாணை நிலை எண்.154 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.06.2004ல் இந்நகராட்சிக்கு நகரமன்ற உறுப்பினர் வார்டுகள் எண்ணிக்கை 21 என நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது இந்நகராட்சி 28.49 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி 33899 நபர்கள் வசிக்கும் நகரமாகவும் 21 வார்டுகளை கொண்டதாகவும் உள்ளது.
3. அரசாணை (M.S) எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.082010ன் படி ரூ.10.00 கோடிக்கு மேல் வருமானம் உள்ள நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஜெயங்கொண்டம் நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்த பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.
4. ஜெயங்கொண்டம் நகராட்சி தற்போது 2020 ஆம் ஆண்டு மக்கள் தொகை 33945 ஆகும். தற்போது நகராட்சியின் வருமானம் கேட்பு பட்டியல் படி ரூ.5.96 கோடி ஆக உள்ளது. இதர வருவாய் சேர்த்து 2020–2021 ம் ஆண்டு கணக்கீட்டின்படி ஆண்டு வருமானம் ரூ.7.91 கோடி மற்றும் ஆண்டு செலவினம் ரூ.8.93 கோடியாகவும் உள்ளது. நகர் பகுதிகளில் 13817 குடியிருப்புகள் உள்ளது.
5. ஜெயங்கொண்டம் நகராட்சி கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 1.44 எம்.எல்.டி குடிநீர் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களான 70 எண்ணிக்கை ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து 1.44 எம்.எல்.டி பெறப்பட்டு ஆக மொத்தம் 2.88 எம்.எல்.டி குடிநீரில் தினந்தோறும் 85 எல்.பி.சி.டி என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது.
6. ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் இதுவரை 6691 குடிநீர் குழாய்கள் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.
7. ஜெயங்கொண்டம் நகராட்சி 110.968 கி . மீ நீளமுள்ள சாலை வசதிகள்.
    1. 21 வார்டுகளிலும் 1909 எல்.இ.டி பல்புகள் கொண்ட தெருவிளக்கு வசதிகள் .
    2. 9 பூங்காக்கள்.
    3. " C " Grade கொண்ட புதிய பேருந்து நிலையமாகும்.
    4. 20 KLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் திடக்கழிவு மையம் தற்போது பணி முடிவடையும் நிலையில் உள்ளது.
    5. நகர் பகுதியில் நாள் ஒன்றுக்கு 11.96 மெட்ரிக் டன் குப்பைகள் 100% Door to Door Collection மூலம் சேகரிக்கப்பட்டு 86% மக்கும் குப்பை மக்காத குப்பைகள் என பிரித்து வழங்கக்கூடிய அமைப்பகள், குப்பைகளை உரமாக்க நகர் பகுதிகளில் 2 இடங்களில் நுண்ணிய உரமாக்கும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.
    6. 4.20.0 ஹெக்டேர் கொண்ட உரக்கிடங்கில் பயோ மைனிங் முறையில் 9278 க.மீ அளவு குப்பைகளை பிரித்து எடுத்து சுத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

7. அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்கும் பொருட்டு இணைப்புகளுக்கான கட்டணங்களை 10 தவணையில் செலுத்தும் முறையில் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

போதுமான அளவு ஏற்படுத்தித் தர ஏதுவாக இருக்கும் என்பதால் தற்போதைய இரண்டாம் நிலை நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக தரம் உயத்தலாம்.

மேலும் அருகில் அமைந்துள்ள கழுவந்தோண்டி ஊராட்சியில் புதிய நீதிமன்ற கட்டிடங்கள் கட்டப்பட்டும் மற்றும் கல்லூரிகள் அமைக்கப்பட்டும் தற்போது நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் உள்ளது.

மேலும் அருகில் உள்ள ஊராட்சியினை இணைப்பதால் நகராட்சியின் பரப்பளவு 28.49 சதுர கிலோ மீட்டரும் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 25.48 கோடியாகவும் உயரும்.

நகராட்சியாக தரம் உயர்த்துதல் தொடர்பாக சட்ட வழிமுறைகளில் ரூ.15.00 கோடி வருவாய்க்கு மேல் உள்ள நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் அரசியலமைப்பு சட்டத்தின்படி பிற மாநகராட்சிகளும் நகராட்சி என்ற வரையறையின் கீழ் வருவதால் அரசு கொள்கை முடிவின் அடிப்படையில் பரப்பளவு , மக்கள் தொகை , மக்கள் தொகை அடர்த்தி , வருவாய் ஆகியவற்றை கணக்கில் கொண்ட நடைமுறைகளை பின்பற்றி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

## <u>மூன்றாண்டு வருவாய் விபரம்</u>

| வ. எண் | நகராட்சியின் பெயர் | வருடம் | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | வித்தியாசம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | ஜெயங்கொண்டம் | 2018-2019 | 1096.62 | 947.39 | 149.23 |
| 2. | | 2019-2020 | 829.06 | 740.05 | 89.01 |
| 3. | | 2020-2021 | 791.41 | 893.37 | - 101.96 |

<u>ந.க.எண்.626 /சி1/2023</u>

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அரசாணை கடிதம் மற்றும் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பு மன்றத்தின் பார்வைக்கு.
3. தீர்மான எண்.33

**ஆணையர்,**
**ஜெயங்கொண்டம் நகராட்சி,**